இடைக்கால

# நிதி நிலை அறிக்கை

# 1996-97

*நிதி அமைச்சர்*

## டாக்டர் இரா. நெடுஞ்செழியன்

*அவர்கள் ஆற்றிய உரை*

*மாசி 8, திருவள்ளுவர் ஆண்டு 2027*

*1996ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20ஆம் நாள்*

**தமிழ்நாடு அரசு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 1996-97 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தைச் சட்ட மன்றப் பேரவையில் வைத்து, 1996 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20 ஆம் நாள் அன்று ஆற்றும் உரை.**

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!*

*1995-96 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1996-97 ஆம் ஆண்டிற்குரிய இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இந்தப் பேரவையின் மேலான ஒப்புதலுக்கு வைப்பதில் நான் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் கொள்கிறேன்.*

**"பிணி இன்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்<br>அணி என்ப நாட்டிற்கு இவ் வைந்து."**

*நோய் இல்லாமை, பொருள் வளம், விளைவு மிகுதி, இன்ப வாழ்வு, நல்ல பாதுகாப்பு ஆகிய ஐந்தும், ஒரு நாட்டிற்கு அணிகலன்களாக விளங்குவனவாகும் என்று அறிவுடையோர் கூறுவார்கள் என்பது திருவள்ளுவப் பெருந்தகையாரின் சீரிய வாக்கு. திருவள்ளுவர் கூறியுள்ள நெறிமுறைக்கு ஏற்ப, தமிழ்நாடு, சென்ற ஐந்தாண்டுக் காலமாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் செம்மையான ஆட்சியின் கீழ் இயங்கி வருகிறது என்பது, அனைவரும் அறிந்த உண்மையாகும்.*

*1991 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டு மக்கள், புரட்சித் தலைவி டாக்டர். ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பெரிய பெரும்பான்மை பெறுகின்ற வகையில் வாக்களித்து ஆட்சியில் அமர்த்தினர். பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்தளித்த அடிப்படைத் தத்துவங்கள், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மனிதநேய நெறி ஆகியவற்றின் அடிப்படையில், இவ்வரசு நடைமுறைப்படுத்திய கொள்கைகளும் திட்டங்களும் தமிழ்நாட்டு*

மக்களின் வாழ்வில் வளம் பெற்றுத் தந்துள்ளன. இவ்வரசின் மீது மக்கள் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை மிகச் சரியானதே என்பது கடந்த ஐந்தாண்டுகளாக எய்திய சாதனை வாயிலாக முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாம் அளித்த வாக்குறுதிகளைச் செம்மையாகச் செயற்படுத்தி மிகச் சிறந்த நிருவாகத்தைப் பேணிக் காத்து, இம்மாநிலத்தை நிலையான வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றுள்ளோம்.

2. இவ்வரசு, 1996 ஜூனில் முழுப்பதவிக்காலத்தை வெற்றிகரமாக முடிக்கவுள்ளது. நாடாளுமன்ற ஜனநாயக நெறியின் மிகச் சிறந்த மரபுகளைப் பின்பற்றும் வகையில், 1996–97 ஆம் ஆண்டிற்கு இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளோம். அதன் அடிப்படையில், நிதியாண்டின் முதல் ஆறு மாத காலத்திற்குரிய செலவினங்களுக்கு உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி பெறப்படும். தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் புதிய சட்டமன்றப் பேரவையில் முழு அளவிலான வரவு–செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும்.

3. 1990, 1991 ஆம் ஆண்டுகளில் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி நிலைமை, பொருளாதாரச் சீர்திருத்தம் மற்றும் தாராளமயமாக்கல் தொடர்பாகப் பெரும் விளைவை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்கச் செய்தது. மத்திய அரசின் பொருளாதாரச் சீர்திருத்தத்தை இவ்வரசு தொடர்ந்து ஆதரித்து வந்துள்ளது. அதே சமயத்தில், ஏழை எளிய, வசதி வாய்ப்பற்ற மக்கள் மீது நாம் கொண்ட அக்கறையின் காரணமாக, ஏழை எளிய மக்களின் வாழ்க்கை நிலை பாதிக்கப்படாத வகையிலும், சமூக நலத் திட்டங்கள் குறித்த இன்றியமையா இனங்களுக்குச் செய்யப்படும் செலவின் அளவுகள் குறைக்கப்படாமலிருப்பதன் வகையிலும் உறுதி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும் நாம் வலியுறுத்தியுள்ளோம்.

4. தேசிய அளவிலான சீர்திருத்தங்களிலிருந்து மாநில அளவிலான சீர்திருத்தங்களுக்குத் தற்போது பெரிதும் முக்கியத்துவம் அளிக்கிறோம். பெரும் பொருளாதார நிருவாகக் கட்டுப்பாட்டிற்கான அதிகாரங்கள் மத்திய அரசிடமே பெரிதும் உள்ளதால்,

பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் ஒழுங்குமுறை விதிகளைத் தளர்த்தும் வகையில், மத்திய அரசு கொண்டு வரும் சீர்திருத்தங்கள் செயற்படுத்துவதற்கு பொதுவாக எளிமையானவையாகும். இதைக்காட்டிலும், மாநில அரசின் பொருளாதாரச் சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதுதான் மிகவும் கடினமானதாகும். மாநில அரசின் செலவினங்களில் பெரும்பகுதி சமூகப் பணிகள் குறித்ததாகும்; அதனைக் குறைக்க இயலாது, குறைக்கவும் கூடாது. மேலும், மாநில அரசின் செலவினங்களில் பெரும் பகுதி சம்பளங்கள் வகையிலானது; செலவினங்களுடன் தொடர்புடையது; அதனைக் கட்டுப்படுத்துவது கடினமானதாகும். இத்தகு சூழ்நிலையில், பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது முதலான நிதிச் சீர்திருத்தங்களை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதே சமயத்தில், பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தத் தேவையான அடிப்படை வசதிகளைத் தரமுயர்த்தப் பெருமளவில் கூடுதல் முதலீடுகள் செய்ய நிதிவாயில்களைத் திரட்டவேண்டும்.

5. இதில் இடர்ப்பாடுகள் உள்ள போதிலும், தமிழ்நாடு அரசு, இம்மாநிலத்தில் பொருளாதாரச் சீர்திருத்தங்களைக் கொண்டு வரக் கொள்கையளவில் நடவடிக்கைகளை ஏற்கெனவே எடுக்க முனைந்துள்ளது. வரிவிதிப்பைப் பொறுத்தவரையில், சிக்கல் வாய்ந்த விற்பனை வரி முறையை நாம் மிகவும் எளிமையாக்கியுள்ளோம். வரிவீதங்களின் மொத்த எண்ணிக்கை 17 என்பதிலிருந்து 5 அடிப்படை வீதங்களாகவும், 4 தனி வீதங்களாகவும் குறைக்கப்பட்டது. பொருட்களைத் தொகுப்பாக்குவதும் சீரமைக்கப்பட்டது. இடுபொருட்கள் மீதான வரிவிதிப்பைக் குறைப்பதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1995 டிசம்பரில் நடைபெற்ற விற்பனை வரிச் சீர்திருத்தங்கள் குறித்த மாநில நிதி அமைச்சர்கள் கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன்; வரிவீதங்களை நாடு தழுவிய வகையில் பொருந்துமாறு ஒரே சீராக ஆக்குவதற்கும், சீர்குலைக்கும் வரித்தள்ளுபடி செய்தல், வரி செலுத்துவதைத் தள்ளிவைத்தல் ஆகியவை குறித்த திட்டங்களை 1.4.1997க்குள் ரத்து செய்வதற்கும், மாநிலங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

6. இம்மாநிலத்திலுள்ள தொழில்களுக்காக, மேம்படுத்தப்பட்ட அடிப்படை வசதிகளை உருவாக்க, நாம் பல நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். 1992 ஜூனில் அறிவிக்கப்பட்ட தொழில் கொள்கையும் மாநிலத்தின் குறிப்பான செயல் திட்டமும் இம்மாநிலத்தில் முதலீட்டுச் செயற்குறிப்புகளுக்கு விரைவாக அனுமதி வழங்கும் நடைமுறைகளுக்கு வகை செய்கிறது. அடிப்படை வசதிகளுக்கு நிதி ஆதாரங்களை அதிகரிக்கும் நோக்குடன், மின் உற்பத்தி, நெடுஞ்சாலைகள் கட்டமைப்பு போன்ற துறைகளில் தனியார் துறையின் பங்கேற்பை நாங்கள் வரவேற்றுள்ளோம்.

7. இம்மாநிலத்தின் தொழில் சூழ்நிலையில் நாம் ஏற்படுத்தியுள்ள சீரமைப்புகள் நல்ல பலனை அளிக்கத் தொடங்கியுள்ளன. 1991–92ல் 4.1 சதவீதமாக இருந்த தொழில் உற்பத்தியின் வளர்ச்சி வீதம், 1994–95 ல் 8.7 சதவீதமாக உயர்ந்துள்ளது. மாநிலத்தின் நிகர உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 1991–92 ல் 2.69 சதவீதத்திலிருந்து 1994–95 ல் 4.90 சதவீதமாக உயர்ந்துள்ளது.

8. நடப்பாண்டில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலையாலும், கருநாடக அரசு காவிரியில் நீரை விடுவிக்காததாலும் 14 இலட்சம் டன் உணவு தானிய உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வறட்சியால் ஏற்படும் பாதக விளைவிலிருந்து ஏழை, எளிய மக்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து எப்போதும் விழிப்புடன் இருந்துவரும் இவ்வரசு, உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்கும் பொருட்டுப் பொது விநியோக முறையில் குடும்ப அட்டை ஒன்றுக்குக் கூடுதலாக 8 கிலோ அரிசி வழங்க முடிவுசெய்தது. இந்த நடவடிக்கையினால், உணவுப் பொருள் உதவித் தொகைக்காகத் திங்களொன்றுக்கு ரூ. 70 கோடி அளவிற்கு நாம் ஏற்கவேண்டி வந்த கூடுதல் நிதிப் பொறுப்பும் கூட, இந்தத் துணிவான முடிவை எடுப்பதிலிருந்து நம்மைப் பின் வாங்கச் செய்யவில்லை. இத்தொகையுடன், 1995-96 ல் உணவுப் பொருள் உதவித் தொகை வகையிலான ஒட்டுமொத்த நிதிச் சுமை, வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டைத் தாக்கல் செய்தபோது மதிப்பிடப்பட்ட ரூ.600 கோடியிலிருந்து, 1995-96 திருத்த

மதிப்பீட்டில் ரூ.800 கோடியாக உயரும். 1996-97 இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் உணவுப் பொருள் உதவித் தொகைக்காக ரூ.840 கோடி வகை செய்யப்பட்டுள்ளது. விலைவாசியைக் குறைக்கவும், அடிப்படைத் தேவையான உணவுக்கு உத்திரவாதத்தை எவ்வகையிலும் அளிக்கவும் இவ்வரசின் உறுதியினை, 1990–91 ல் ரூ. 105 கோடியாக இருந்த உணவுப் பொருள் உதவித் தொகையை 1995–96 இலும் 1996–97 இலும் வகை செய்யப்பட்டுள்ள உணவுப் பொருள் உதவித் தொகையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் அறியலாம்.

## பத்தாம் நிதிக்குழு

9. 1995–96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டப் பேரவையில் வைத்து ஆற்றிய எனது உரையில், பத்தாம் நிதிக்குழுவின் அறிக்கையையும், நம்முடைய மாநில நிதி நிலையில் அதன் பாதகமான விளைவுகளையும் பற்றி நான் விரிவாக ஆய்வு செய்து விளக்கிக் கூறியிருந்தேன். பத்தாம் நிதிக்குழுவின் பரிந்துரைகள், மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கத்தக்க ஒட்டுமொத்த நிதி ஆதாரங்களை உயர்த்தவில்லை என்பதை நான் சுட்டிக் காட்டியிருந்தேன். மிகச் சிறப்பான முறையில் நிதியை நிருவகித்த தமிழ்நாடு போன்ற மாநிலங்கள், பத்தாம் நிதிக் குழுவின் பரிந்துரையினால் எவ்வாறு பாதிக்கப்பட்டன என்பதையும் நான் குறிப்பிட்டிருந்தேன். மேலும், பத்தாம் நிதிக் குழு அறிக்கையின் சில அம்சங்கள் குறித்து நாம் மேல் நடவடிக்கையை எதிர்நோக்கியுள்ளோம். பத்தாம் நிதிக் குழு கருத்துத் தெரிவித்த நிதிப்பகிர்வுக்கான மாற்றுத் திட்டம் குறித்து மத்திய அரசு இன்னும் நடவடிக்கையெடுக்கவில்லை. இந்த மாற்றுத் திட்டத்தில், மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும் ஒட்டு மொத்தப் பங்களவு உயராது போனாலும், மத்திய அரசு விதித்து வசூலிக்கும் வரிகளில், அதிகம் உயர்ந்து வரக்கூடிய வரிவரவுகளில், அதாவது நிறுவன வரி, சுங்கத் தீர்வை போன்றவற்றில் கிடைக்கும் வரவுகளில் மாநிலத்திற்கு ஒரு பங்கு கிடைக்கும். நடப்பாண்டில் கூட, மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படாத சுங்கத் தீர்வைகள், நிறுவன வரி ஆகியவற்றின் வளர்ச்சி வீதம், மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுகின்ற

ஆயத்தீர்வைகளின் வளர்ச்சி வீதங்களைக் காட்டிலும் அதிகமாகவுள்ளது என்று தெரிகிறது. எனவே, பத்தாம் நிதிக் குழு பரிந்துரைத்த நிதிப் பகிர்வுக்கான மாற்றுத் திட்டம் குறித்து மத்திய அரசு தேவையான மேல் நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நாம் வலியுறுத்துகிறோம்.

10. பத்தாம் நிதிக் குழு உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானியங்கள் வழங்கப் பரிந்துரைத்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். உள்ளாட்சி மன்றங்கள், புதிய மூலதன முதலீடுகளுக்காக மட்டுமே இத்தகைய மானியங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். **1996-97 ல் தமிழ்நாட்டிற்கு ரூ.100.71 கோடி கிடைக்கும். இதில் ரூ.71.83 கோடி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும், ரூ.28.88 கோடி நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கப்படும்.** இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இதற்குத் தேவையான நிதி ஒதுக்கங்கள் செய்யப்பட்டுள்ளன. உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே இத்தகைய மானியங்களைப் பகிர்ந்தளிப்பது, மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நடைபெறும்.

## ஆண்டுத் திட்டம்

11. 1991-92 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு மாநிலம், ஒவ்வோர் ஆண்டும் ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டளவை பெரிய அளவில் அதிகரித்து வந்து சாதனை புரிந்திருப்பதையும், இதற்கான ஒப்புதலைப் பெறுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருந்த சீரிய முயற்சிகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். மேலும், குறிப்பாகத் திட்டங்களைச் செயல்படுத்தும்போது, ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவை ஆண்டு தோறும் விஞ்சியுள்ளோம். பெரிய மாநிலங்கள் பல, அவற்றின் ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டளவைக் கூட எய்த இயலாமல் இருந்த நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தச் சாதனை அரும்பெரும் சாதனையாகும். இது மாநிலத்தை மேம்படுத்த அரசின் உறுதியைக் காட்டுகிறது.

12. 1994–95 ஆம் ஆண்டில், சிறப்புவகையின அல்லாத ஒன்பது மாநிலங்கள் முதலில் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டை எய்த முடியாத நிலையில் இருந்தன. இவ்வாறிருக்க, 1994–95 ஆம் ஆண்டுக்கான ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவு 30.89 சதவீதம் அதிகரிக்கப்பட்டு, ரூ.2750 கோடியாக உயர்த்தப்பட்டிருந்த போதிலும், நாம் எய்திய சாதனையின் அளவு ரூ.2845.70 கோடி ஆகும்.

13. நடப்பாண்டில், ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ.3200 கோடி என்றிருக்க, வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.3250.58 கோடியாகும். திருத்த மதிப்பீடுகளில், திட்டப் பணிகளுக்கான ஒதுக்கீடு ரூ.3316.24 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 1995–96ஆம் ஆண்டிலும் திட்ட ஒதுக்கீட்டளவை முழுமையாக அடைவோம் என அரசு உறுதியாக நம்புகிறது. இத்துடன், எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நான்காம் ஆண்டு இறுதியில், பணவீக்கத்தை கணக்கில் கொள்ளாத ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டில் 80.66 சதவீதம் நிறை வேற்றப்பட்டிருக்கும். இதே காலஅளவில், சிறப்பு வகையின அல்லாத மாநிலங்கள் அனைத்தும் எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டில் 59 சதவீதத்தை மட்டுமே நிறைவேற்றியிருக்கும். அதனுடன் ஒப்பிட, இம்மாநிலத்தின் சாதனை மிகச் சிறப்பானதாக இருக்கும்.

14. 1996–97ஆம் ஆண்டிற்குரிய ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டளவு பொதுத் தேர்தல் முடிந்த பின்னரே மத்திய திட்டக் குழுவால் முடிவு செய்யப்படும். இருப்பினும், இந்த இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நடைபெற்றுவரும் திட்டப் பணிகளுக்கென ரூ.3549.68 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. திட்ட அளவு இறுதியாக முடிவு செய்யப்படும்போது, ஒதுக்கீட்டளவு மேற்கொண்டும் உயர்த்தப்படலாம். விலைவாசி ஏற்றத்தைக் கணக்கிற்கொள்ளாத எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட ஒட்டுமொத்த ஒதுக்கீட்டளவான ரூ.10,200 கோடியை இம்மாநிலம் விஞ்சும் என்பதை இது உறுதி செய்யும்.

## ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம்

15. இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கான சீர்திருத்தங்களுக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுடன் கூடவே, ஏழை எளிய மக்களுக்காக உணவுக்கு உத்தரவாதம், சத்துணவு, தொடக்கச் சுகாதாரப் பணி, அனைவருக்கும் தொடக்கக் கல்வி, ஏழை எளியவர்க்கு வேலை வாய்ப்புத் திட்டங்கள், குடிநீர் வசதி, வீடு இல்லாதவர்க்கு வீட்டு வசதி, சமூகப் பாதுகாப்பு, நலிந்த பிரிவினருக்கான சிறப்புத் திட்டங்கள் ஆகிய திட்டங்கள் அடங்கிய சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை நாங்கள் உருவாக்கினோம். **சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்காக 1995-96 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் மொத்தம் ரூ.2048.64 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1996-97ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென ரூ.2076.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

16. மாண்புமிகு முதலமைச்சர் 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்,14ம் நாள்அன்று தொடங்கிய 15 அம்சத் திட்டத்தைச் செயலாக்குவதில் அடைந்த முன்னேற்றம் தொடர்ந்து செயலாக்கப்படுகிறது. குழந்தைகள் நலனுக்கான புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா 15 அம்சத் திட்டம், பன்னாட்டுப் பார்வையாளர்களிடமிருந்து பாராட்டுகளைப் பெற்றுள்ளது. 15 அம்சத் திட்டத்தின் செயல்பாடான குழந்தை நலத் துணைத் திட்டம் 1994–95, 1995–96 ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. **1996-97ஆம் ஆண்டில் இத்துணைத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.819.31 கோடி ஆகும்.**

17. குழந்தைகளுக்குச் சத்துணவு அளிப்பதில் தமிழ்நாடு மாநிலம் பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. **1996-97ல் சத்துணவுத் திட்டத்திற்கும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்திற்குமான ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடு ரூ.354.36 கோடி ஆகும்.** மூன்றாவது தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்தின் ஆயத்தப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது, இம்மாநிலத்திலுள்ள பாலர் பள்ளிச் சிறார்கள் அனைவருக்கும் சத்துணவும், சுகாதாரப் பாதுகாப்பும் தொடர்ந்து அளிக்கப்படுவதை உறுதி செய்யும்.

18. சுகாதார-மருத்துவப் பணிகள், அதிலும் குறிப்பாகத் தொடக்கச் சுகாதாரப் பணி, இந்த அரசு தனிக்கவனம் செலுத்துகின்ற முக்கியப் பணியாகும். சுகாதாரம்-குடும்ப நலன் குறித்த நிதி ஒதுக்கீடு 1995-96ல் ரூ.688.95 கோடி என்றிருக்க, 1996-97 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.737.08 கோடி ஆகும். அரசு மருத்துவ மனைகளிலும், சுகாதார மையங்களிலும் தற்போதுள்ள மருத்துவப் பணிகளின் தரத்தைக் கணிசமான அளவிற்கு மேம்படுத்துவதில் பெரிதும் கவனம் செலுத்தப்படுகிறது. 1996-97 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மருத்துவமனைக் கட்டிடங்கள், சாதனங்கள் பராமரிப்பிற்குப் போதுமான அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மருந்துகள், மருந்துப் பொருட்கள் வழங்குவதற்கான ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடு ரூ.97 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் நிறுவனம் வாயிலாக, மருந்துகள், அறுவைச் சிகிச்சைச் சாதனங்கள் வழங்குவதைச் சீரமைக்க இந்த அரசு எடுத்த முயற்சிகளை, அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூர்வர். இந்த நடவடிக்கைகள், இம்மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள், தொடக்கச் சுகாதார நிலையங்களில் தரமான மருந்துப் பொருட்கள் கிடைக்கச் செய்வதை உறுதிசெய்து சமுதாயத்தின் மிக வறிய நிலையிலுள்ளவர்களுக்குப் பயனளிப்பதாக அமைந்துள்ளன. நம்முடைய இப்பணியை முன்மாதிரியாகக் கொண்டு, ஏனைய மாநிலங்களும் நடவடிக்கை எடுத்து வருகின்றன என்பது நமது அரசுக்குப் பெரிதும் மனநிறைவு அளிப்பதாகவுள்ளது. மருந்துகளைக் கொள்முதல் செய்து அரசுத் துறைகள் அனைத்திற்கும் வழங்கும் முக்கிய அமைப்பாக இந்நிறுவனத்தை உருவாக்க நாங்கள் கருதுகிறோம்.

19. கல்வித் துறையே பெரும் அளவில் நிதி ஒதுக்கீட்டைப் பெறும் துறையாகத் தொடர்ந்து விளங்குகிறது. 1996-97ல் இத்துறைக்கு அளிக்கப்படும் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.2504.51 கோடியாகும். தரம் வாய்ந்த பள்ளிக் கல்வி அளிப்பதை உறுதி செய்தல் என்கிற அரசின் கல்விக் கொள்கைக்கு இணங்க, பல்வேறு நிலையில் கல்வித் தரத்தை உயர்த்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அறைக்கலன்கள், ஆய்வுக் கூடங்கள், கற்பிக்கும் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள் முதலிய வசதிகளை அளிப்பதன் மூலம், பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது. மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம், 1996-97ல் மேலும் மூன்று மாவட்டங்களில் செயலாக்கப்படும். இத்திட்டத்தைச் செயலாக்குவதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.3.32 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1996-97-ல் தொழில் நுட்பக் கல்வித் திட்டத்தைச் செயலாக்க ரூ.8.02 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

20. ஆளுநர் உரையில் ஆதி திராவிடர் நலனுக்காகச் செயலாக்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் விவரம் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர், பழங்குடியினர் நலனுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு, 1996-97ல் ரூ.230.41 கோடி ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டளவு 1991-92-ல் ரூ.114.96 கோடியாக இருந்தது. இந்த நிதி ஒதுக்கீட்டளவு இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர், பழங்குடியினர் நலனில் இந்த அரசு கொண்டுள்ள உறுதியினை இது காட்டுகிறது.

## வளர்ச்சித் திட்டங்கள்

21. 1996-97 ஆம் ஆண்டிற்காக நடைபெற்று வருகிற திட்டங்களுக்குச் செய்யப்பட்ட முக்கியமான நிதி ஒதுக்கீடுகள் சிலவற்றை, நான் சுருக்கமாக எடுத்துரைக்க விழைகிறேன்.

22. வேளாண் உற்பத்தியில் இம்மாநிலம் அடைந்துள்ள மிகச் சிறந்த சாதனை ஆளுநர் உரையில் ஏற்கெனவே சிறப்பிடம் பெற்றுள்ளது. இது, இந்த அரசின் ஒட்டு மொத்த வேளாண் வளர்ச்சி உத்திகளின் வெற்றியைக் காட்டுகிறது; இதனால், உழவர்கள் தங்களுடைய உற்பத்திப் பொருளுக்கு அதிக விலை பெறுவதற்கு இந்த அரசு உறுதி செய்தது. வேளாண் தொழிலில் அரசு தொடர்ந்து முதலீடு செய்யவும் ஆவன செய்யப்பட்டது. வேளாண் துறைக்கு, இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்தத் திட்ட ஒதுக்கீடு ரூ.210.24 கோடி ஆகும். தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இடைக்கால வரவு-செலவுத் திட்ட

மதிப்பீட்டில் ரூ.86.06 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. வேளாண் மனித வள மேம்பாட்டுத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு 1996–97 இல் ரூ.20.80 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

23. இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், பாசனத் துறையின் திட்டப் பணிகளுக்கான மொத்த நிதி ஒதுக்கம் ரூ.249.83 கோடி ஆகும். ரூ.1,240 கோடி செலவாகும் நீர் ஆதாரங்களை நிலைப்படுத்தும் திட்டம் 1995 அக்டோபர் முதல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தால் 16.68 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பு பயன் பெறும். இது, அரசின் நீர் ஆதாரங்கள் வாயிலாகப் பாசனம் பெறுகின்ற பகுதியில் சுமார் 50 சதவீதம் ஆகும். இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், நீர் ஆதாரங்களை நிலைப்படுத்தும் திட்டத்திற்கு ரூ.89.89 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏரிகளை நவீனமயமாக்கல் திட்டத்திற்கு ரூ.18.98 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், 30,000 ஏக்கர் ஆயக்கட்டுப் பகுதிக்குப் பாசனம் அளிக்கின்ற மேலும் 100 ஏரிகளுக்கு நீட்டிக்கப்பட்டு வருகின்றது. பாசனத் திட்டங்கள் பராமரிப்பிற்காகப் போதுமான அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை உறுதி செய்தது, எங்களுடைய குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும். ஒன்பதாம், பத்தாம் நிதிக் குழுக்கள் நிர்ணயித்த அளவுகளை எய்த பராமரிப்பு நிதி ஒதுக்கத்தை நாங்கள் உயர்த்தியுள்ளோம். 1991–92ல், பெரும் பாசனப் பணிகள் பராமரிப்பிற்கான ஒட்டு மொத்த நிதி ஒதுக்கம் ரூ.10.65 கோடி ஆகும். சிறுபாசனப் பணிகள் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கம் ரூ.3.50 கோடி ஆகும். 1996–97 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், பெரும் பாசனப் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கம் ரூ.21.84 கோடி ஆகும். சிறுபாசனப் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கம் ரூ.7.90 கோடி ஆகும்.

24. இந்த அரசு முன்னுரிமை அளிக்கும் துறைகளில் ஊரக வளர்ச்சியும் ஒன்றாகும். 1996-97 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ஊரக வளர்ச்சிக்கான மொத்த திட்ட நிதி ஒதுக்கீடு ரூ.276.40 கோடியாக அதிகரித்துள்ளது. பத்தாம் நிதிக்குழுவின் பரிந்துரைகளின் ஒரு பகுதியாக, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மூலதன மானியமாக ரூ.71.83 கோடி நிதி ஒதுக்கம்

செய்துள்ளதும் இதில் அடங்கும். 1996-97 ஆம் ஆண்டில், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் மொத்தம் ரூ.368.60 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். மாநில அரசின் பங்காக ரூ.87.70 கோடி நிதி ஒதுக்கம் இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. 1995-96 ஆம் ஆண்டில், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 70,187 கான்கிரீட் வீடுகள் கட்டப்பட உள்ளன. 1996-97 ஆம் ஆண்டில் அதே எண்ணிக்கையிலான வீடுகளைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1996-97 ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த ஊரக மேம்பாட்டுத் திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.86.92 கோடி ஆகும். இதில் மாநில அரசின் பங்காக ரூ.43.46 கோடி இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு, நிபந்தனைகளற்ற வகையில் நிதி வழங்க, 1992-93 ஆம் ஆண்டில் ரூ.20 கோடி ஒதுக்கீட்டுடன் அதிகாரத்தைப் பரவலாக்கிய மாவட்டத் திட்டத்தைத் தொடங்கியிருந்தோம். 1995-96 ஆம் ஆண்டில் இந்த ஒதுக்கீடு ரூ.50.71 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 1996-97 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளிலும் இதே அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

25. அடிப்படை வசதித் துறைகளை மேம்படுத்த இந்த அரசு நிலைத்த முக்கியத்துவம் அளித்து வருகிறது என்பதை அனைவரும் நன்கறிவர். **1995-96 ஆம் ஆண்டிற்கு மின்விசைத் துறைத் திட்ட ஒதுக்கீடான ரூ.750 கோடி, செயல்படுத்தப்படும் நிலையில் அதை விட அதிகரிக்கும்.** மின் உற்பத்தித் திறனைக் கூடுதலாக உருவாக்க, மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து ஏற்கெனவே ஆளுநர் உரையில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில், மின் அனுப்புகை-விநியோகப் பணி அமைப்பை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில், தமிழ்நாடு மின்வாரியம், 1995-96 ஆம் ஆண்டில் 110 துணை நிலையங்களை அமைத்து வருகிறது. 1995-96 ஆம் ஆண்டில் விவசாய பம்பு செட்டுகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கும் வகையில் ஏற்படக் கூடிய இழப்பு ரூ.1358 கோடியாக இருக்கும். 1996-97 ஆம் ஆண்டில் இந்த இழப்பு மேலும் அதிகரிக்கக் கூடும்.

26. 1996-97 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில், சாலைகள், பாலங்களுக்குக்காக ரூ.468.32 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது, 1995-96 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூ.424.12 கோடியைக் காட்டிலும் கணிசமான அளவு அதிகமானதாகும். 1996-97 ஆம் ஆண்டில் சாலைகளைப் பராமரிப்பதற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.204.46 கோடியாக இருக்கும். பராமரிப்பில் எஞ்சியுள்ள பணிகளை மேற்கொள்ள ஐந்தாண்டு காலச் சிறப்புப் பழுதுபார்ப்புத் திட்டம் ஒன்று 1991-92ல் தொடங்கப்பட்டது. இது 1995-96 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். இதற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.178.40 கோடியாகும். இதற்கு முதலில் வகை செய்யப்பட்ட ஒதுக்கீடு ரூ.150 கோடியாகும். இத்திட்டத்தின் கீழ் 15,926 கி.மீ. சாலைகள் பராமரிக்கப்பட்டுள்ளன. ஊரகச் சாலைகள் திட்டத்திற்கான நிதி ஒதுக்கம், 1996-97 ஆம் ஆண்டில் ரூ.22.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஊரகச் சாலைகள் திட்டம் முழுவதும், 1997 மார்ச்சுக்குள் முடிக்கப்பட்டுவிடும். அதற்கேற்ப இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடுகள் ரூ.35 கோடி அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளன. கடற்கரையோரச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், ரூ9.21 கோடி ஒதுக்கீட்டுடன், 1996-97 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

27. நாட்டில் நகர்மயமான மாநிலங்களில் இரண்டாவது மாநிலமாக, தமிழ்நாடு திகழ்கிறது. நகர்ப் பகுதிகளின் அதிகரித்து வரும் தேவைகளுக்கு அதிகஅளவில் நிதி ஒதுக்கவேண்டியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ரூ.206.19 கோடி வரவு-செலவுத் திட்ட ஆதரவு உள்பட, மொத்தம் ரூ.260.50 கோடி ஒதுக்கீட்டுடன், 1996-97 ல் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இம்மாநிலத்திலுள்ள நகராட்சிகளின் அடிப்படை வசதிகளுக்காகத் தேவைப்படும் நிதியுதவி கிடைக்கவும், தரமான திட்டங்களைத் தயாரித்து மதிப்பீடு செய்யப்படுவதை உறுதி செய்யவும், நிதி நிறுவனங்கள் பங்கேற்கும் வகையில், நகர்ப்பகுதி அடிப்படை வசதி நிதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் ஆற்றல் வாய்ந்த தொழில் பகுதியான திருப்பூர் மாநகரில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணி புதிய திருப்பூர் மேம்பாட்டு நிறுவனத்திடம்

ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில், தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TACID), திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம், அடிப்படை வசதி-குத்தகை-நிதியுதவி நிறுவனம் (ILFS) ஆகியவை பங்குதாரர்களாக இருக்கும். இந்நிறுவனம், திருப்பூரின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த மூலதனச் சந்தையில் நிதி திரட்டுவதுடன், உருவாக்குதல், இயக்குதல், மாற்றுதல் (B.O.T) போன்ற புதிய உத்திகளைப் பின்பற்றி, பெரிய அளவில் முதலீடு செய்யும். இந்தப் புதிய முயற்சிகள் மூலம் திருப்பூரில், குடிநீர் வழங்கல், சாலைகள், தகவல் தொடர்பு, நகரக் கழிவுப் பொருள்களை அகற்றுதல், கழிவு நீரைச் சுத்திகரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ.1313.20 கோடி முதலீடு செய்யப்படும்.

28. "எழில்மிகு சென்னை 2000" திட்டத்தின் அனைத்து அம்சங்களின் கீழும் கணிசமான அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். சென்னை மாநகரை 2000 ஆம் ஆண்டில், முன்னோடிப் பெருநகரமாக உருவாக்க வேண்டுமென்ற நோக்குடன் இந்த அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள், முழு அளவில் வெற்றியடையும் என்று உறுதியுடன் நம்புகிறோம். சென்னை மாநகரில் புறவட்டச்சாலை (Outer Ring Road) அமைக்கும் பணி ரூ.317 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். நிலங்களைக் கையகப்படுத்த ரூ.10 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.56 கோடி பங்கு மூலதனத்துடன் பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகரில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.887 கோடி மதிப்பிற்கான திட்டங்களுக்கு இந்த நிறுவனம் நிதி உதவி அளிக்கும். இந்நிறுவனத்திற்கு, எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ்நாடு அரசும் மத்திய அரசும் முறையே ரூ.100 கோடி நிதியுதவியை மானியமாக வழங்கும்.

29. வீட்டு வசதித் துறை கணிசமான அளவிற்கு வேலை வாய்ப்பை உருவாக்குவதன் மூலம் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிக்கிறது. வீட்டுவசதித் துறையில் மாநில அரசின் சாதனை மிகவும் சிறந்து விளங்குகிறது. ஊரக வீட்டுவசதி திட்டத்தின் கீழ், 1995–96 ஆம் ஆண்டில் கட்டப்பட வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை 58,200 ஆக

உயர்த்தப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் வீடுகளின் நிலை உயர்த்தல் (SHUPRA) திட்டம் 1996–97 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.1.50 கோடி ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும். தமிழ்நாடு குடிசைப்பகுதிமாற்று வாரியம், 1996–97 ஆம் ஆண்டில், ரூ.2.50 கோடி செலவில், தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு அம்சமான குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 10,000 குடும்பங்களுக்கு நிதி உதவி அளிக்கும். 1996–97 ஆம் ஆண்டில், மொத்தம் ரூ.8 கோடி செலவில், 2500 குடியிருப்புகள் கட்டப்படும். இத்துடன், தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புற குடிசைப்பகுதி பிரச்சினைகளைச் சமாளிக்க பத்தாம் நிதிக்குழு, தனிப்பிரச்சினை மானியமாக ரூ. 60 கோடி வழங்கப் பரிந்துரைத்துள்ளது. மேம்படுத்தப்பட்ட மாற்று மனைகளில், குடிசைப்பகுதியில் வாழும் குடும்பங்களைக் குடியமர்த்த உரிய திட்டங்கள் வகுக்கப்படும். 1996–97ல், அரசுப்பணியாளர்களுக்கான வீடு கட்ட முன்பணம் குறித்த நிதி ஒதுக்கம் ரூ.74.15 கோடியாகக் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. 1991–92ல் ரூ.17.63 கோடியாக மட்டுமே இருந்த வீடு கட்டுவதற்கான முன்பணத்திற்கான நிதி ஒதுக்கம், நான்கு மடங்குக்கும் மேல் உயர்த்தப்பட்டுள்ளதை இது காட்டும்.

30. 1996–97 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத்திட்ட மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல், கழிவு நீர் அகற்றலுக்கான மொத்த ஒதுக்கீடு, ரூ.482.50 கோடியாக இருக்கும். ஊரகக் குடிநீர் வழங்கலுக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.103.95 கோடியாக இருக்கும். ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டப் பணியில் தமிழ்நாட்டின் சாதனை பாராட்டத்தக்கதாக உள்ளது. 1991–92 முதல் 1995–96 வரையிலான ஐந்தாண்டுக் கால அளவில், மொத்தம் 1 கோடி மக்கள் தொகையுடன் கூடிய, இம்மாநிலத்தில் உள்ள 17,987 ஊரகக் குடியிருப்புப் பகுதிகள் இத்திட்டத்தினால் பயன் அடைந்துள்ளன. இதில், 30 இலட்சம் மக்கள் தொகையுடன்கூடிய 8,315 ஆதிதிராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகளும் அடங்கும். இம்மாநிலத்தில் உள்ள ஒவ்வோர் ஊரகக் குடியிருப்பிலும் குறைந்தது ஒரு குடிநீர் ஆதாரத்துக்கான ஏற்பாடாவது செய்து கொடுக்கப்படும் என்பதை உறுதி செய்யதுள்ளோம். 1996–97 ஆம் ஆண்டிலிருந்து, ஓரளவு குடிநீர் வசதி பெற்றுள்ள ஊரகக் குடியிருப்புகளில், குடிநீர் வழங்கலை அதிகரிக்க

முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இம்மாநிலத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் குடிநீர் வழங்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 1996-97 ஆம் ஆண்டில் 326 நகரப் பேரூராட்சிகள், 173 ஊரகப் பேரூராட்சிகள் ஆகியவற்றில் குடிநீர் வழங்கு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

31. தொடர்ந்து இருந்து வரும் குடிநீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினையிலிருந்து சென்னை மாநகரை விடுவிக்க இந்த அரசு உயரிய முக்கியத்துவம் அளித்துள்ளது. முதல் சென்னை குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்றுத் திட்டம் மொத்தம் ரூ.255.05 செலவில் 1996 மார்ச்சில் முடிவடையும். சென்னை மாநகருக்கு வீராணம் ஏரியிலிருந்து நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீரைக் கொண்டு வருவதற்கான மொத்தம் ரூ.1638 கோடி செலவிலான இரண்டாம் சென்னை குடி நீர் வழங்கல்-கழிவு நீரகற்றல் திட்டம் 1995 அக்டோபரிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கம் ரூ.299.10 கோடியாகும். கிருஷ்ணாநதி நீரைப் பெற்று, தூய்மைப்படுத்தி, வழங்குவதற்கான முதல் கட்டப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. தெலுங்கு கங்கைத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான செலவில் மொத்தப் பங்கான ரூ.521 கோடியில் ரூ.462 கோடி ஆந்திரபிரதேச அரசுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. சென்னை மாநகருக்கு உடனடியாக நீரை வழங்குமாறு ஆந்திரப்பிரதேச அரசை நாம் வலியுறுத்துவோம்.

## நிதி நிலைமை

32 . இந்த அரசு பதவியேற்றபோது இருந்த இடர்ப்பாடான நிதி நிலைமையை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். இந்த அரசு பதவியேற்றபோது, 1991-92 ஆம் ஆண்டிற்குரிய மொத்த நிதிப் பற்றாக்குறை ரூ.898 கோடியாக இருந்தது. நாட்டு மது விற்பனை முற்றிலுமாக ஒழிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், அரசு எடுத்திருந்த முதல் முடிவின் விளைவாக, இந்த அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூ.322 கோடியாகும். இதனால், இந்த அரசின் ஒட்டு மொத்த நிதிப் பற்றாக்குறை ரூ.1220 கோடியாகியது. இந்த வருவாய்

இழப்பை ஈடுசெய்ய நிதியுதவி அளிக்குமாறு மத்திய அரசிடம் நாம் விடுத்த வேண்டுகோளுக்கு மத்திய அரசிடமிருந்து எவ்வித மறுமொழியும் வரவில்லை. இருப்பினும், திறமையான நிதி நிருவாகத்தின் மூலம், மாநிலத்தின் ஒட்டுமொத்த நிதி இடர்ப்பாட்டு நிலையைச் சரிசெய்து, நிதிநிலையைக் கணிசமான அளவிற்கு மேம்படுத்துவதில் நாம் தற்போது வெற்றி பெற்றுள்ளோம். மின் கட்டண இழப்பீட்டு பாக்கித் தொகை வகையில், தமிழ்நாடு மின் வாரியம் அரசுக்குச் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளைச் சரிக்கட்டுவதைக் கணக்கில் கொள்ளாமல், 1991-92 ஆம் ஆண்டில் ரூ.878.87 கோடியாக இருந்த வருவாய்ப் பற்றாக்குறை, 1992-93 ஆம் ஆண்டில் ரூ.1143.67 கோடியாக உயர்ந்தது. இதன்பின்னர், 1993-94 ஆம் ஆண்டில், வருவாய்ப் பற்றாக்குறையின் அளவு ரூ.691.86 கோடி என்ற அளவிற்குக் குறைக்கப்பட்டது. இது, 1994-95 ஆம் ஆண்டில், ரூ.415.55 கோடியாகக் குறைக்கப்பட்டது.

33. பொருளாதார வளர்ச்சியினால் ஏற்பட்ட வரி வருவாய் அதிகரிப்பு இந்த மேம்பாட்டிற்கு ஒரு காரணமாகும். தெளிவான நோக்கத்துடன் வகுக்கப் பெற்று மாண்புமிகு உறுப்பினர்களின் ஆதரவையும் பெற்றுள்ள அரசின் செலவுக் கொள்கை, வருவாய்ப் பற்றாக்குறை குறைவதற்குக் காரணமாகியது.

34. 1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், (-)ரூ.925.55 கோடி வருவாய்ப் பற்றாக்குறை ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. சென்ற ஆண்டு நான் ஆற்றிய வரவு-செலவுத் திட்ட உரையில், பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் அரிசியின் விலையைக் கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் குறைப்பதாக அறிவித்திருந்தேன். இதன் விளைவாக, வருவாய்ப் பற்றாக்குறை (-)ரூ.150 கோடியிலிருந்து (-)ரூ.1075.55 கோடியாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது. அதற்கேற்ப, 1995-96 ஆம் ஆண்டுக்கான இறுதிப் பற்றாக்குறை (-)ரூ.175.25 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

35. 1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் இடர்ப்பாடான நிதி நிலைமையைத் தெளிவாகக் காட்டியது.

இந்நிலையிலும், முன்னுரிமை அளிக்க வேண்டிய துறைகளில், முக்கிய இனங்களுக்குத் தேவைப்படும் செலவுப் பொறுப்பைக் குறைக்க இயலவில்லை. வறட்சி நிவாரணம் போன்ற அரசின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சில காரணங்களினாலும், சமூகப் பாதுகாப்பு குறித்த செலவு, வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைத் தொடர்ந்து நிலை நிறுத்த வேண்டிய இன்றியமையாத தேவைகளினாலும், 1995–96 ஆம் ஆண்டில் இந்த வருவாய்ப் பற்றாக்குறை மேற்கொண்டும் அதிகரித்தது.

36. மத்திய அரசு, 1.1.1995, 1.7.1995 ஆகிய இரு கால அளவுகளில் ஒவ்வொன்றும் 11 சதவீதம் என்ற அளவில், அதிகமாக 2 கூடுதல் அகவிலைப்படித் தவணைகளை அறிவித்தது. மேலும், மத்திய அரசு, 1.4.1995 ஆம் நாள் முதற்கொண்டு, அனைத்துப் பணியாளர்களுக்கும் அவர்களுடைய அடிப்படைச் சம்பள வீதத்தில் 10 சதவீதத் தொகையை இடைக்கால நிவாரணத் தவணைத் தொகையாக வழங்குவதாக அறிவித்தது. ஏற்கெனவே நாம் மத்திய அரசு சம்பள வீதங்களையும், அகவிலைப்படி வீதங்களையும் பின்பற்றி வருவதால், அதற்கிணங்க இவற்றை வழங்க வேண்டி இருந்தது. இதன் விளைவாக, 1995–96 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கத்திற்கு மேல் ரூ.350 கோடி கூடுதல் செலவு ஏற்பட்டது. முதலில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த உணவு உதவித் தொகை ரூ.600 கோடியிலிருந்து ரூ.800 கோடியாக அதிகரித்துள்ளது. வறட்சி நிவாரணச் செலவிற்கென, இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தொகை ஏதும் ஒதுக்கப்படவில்லை. குடிநீர் பிரச்சினையைச் சமாளிப்பதற்கென இராமநாதபுரம் மாவட்டத்தில், உவர் நீரை நன்னீராக்கும் நிலையத்தை அமைக்கும் வகையில், கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியிருந்தது. 1995–96 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில், ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ.3,200 கோடி என்றிருக்க, திட்டப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.3316.24 கோடியாகும். இவ்வனைத்து இனங்களும் சேர்ந்து, 1995–96 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை கணிசமான அளவு உயர வழிவகுத்தது.

37. 1995–96 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில், மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருவாய் வரவுகள் ரூ.9,689.22 கோடியாகும்.

இது, 1995–96 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளைக் காட்டிலும் ரூ.704.15 கோடி அதிகரித்திருப்பதைக் காட்டுகிறது. இதனால், வரி வசூலை அதிகரிக்க உறுதியான முயற்சிகளை மேற்கொள்ளவும், வளர்ச்சிப் பணிகளுக்கெனப் பெருமளவு நிதி ஆதாரங்களைத் திரட்டவும் முடிந்தது. இது இவ்வாறிருக்க, 1995–96 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளில் வருவாய்க் கணக்கில் ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ.10,857.84 கோடியாகும். 1995–96 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளிலிருந்து, ரூ.947.22 கோடி அதிகரித்திருப்பதை இது காட்டுகிறது. இதனால், 1995–96 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளில், (–)ரூ.1,168.62 கோடியாக வருவாய்ப் பற்றாக்குறை அதிகரித்தது. 1995–96 ஆம் ஆண்டில், இவ்வனைத்துப் பற்று–வரவு நடைமுறைகளினால் ஏற்பட்ட பற்றாக்குறை (–) ரூ.354.50 கோடியாகும். 1994–95 ஆம் ஆண்டுக் கணக்குகளில் காட்டப்பட்ட இறுதி இருப்பு (–)ரூ.55.66 கோடியுடன், 1995–96 ஆம் ஆண்டின் இறுதியில் (–)ரூ.410.16 கோடி நிதிப் பற்றாக்குறை இருக்குமென நான் எதிர்பார்க்கிறேன்.

38. 1996–97 ஆம் ஆண்டிற்குரிய இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருவாய் வரவுகள் ரூ.10,543.52 கோடி ஆகும். வருவாய் வகையிலான செலவு ரூ.11,505.61 கோடியாகும். இதனால், வருவாய்ப் பற்றாக்குறை (–)ரூ.962.09 கோடியாகும். 1996–97 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வருவாய்ப் பற்றாக்குறை அளவு குறைந்ததற்கு முக்கிய காரணம், இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், புதிய பகுதி–II திட்டங்களுக்கெனத் தொகையேதும் ஒதுக்கப்படாததேயாகும். 1996–97 ஆம் ஆண்டிற்குரிய இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளிலுள்ள அனைத்துக் கணக்குகள் குறித்த பற்று–வரவு நடைமுறைகளினால் கிடைத்த நிகரப் பற்றாக்குறை (–)ரூ.270.66 கோடியாகும். 1995–96 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட இறுதி இருப்பு (–)ரூ.410.16 கோடி என்றிருக்க, 1996–97 ஆம் ஆண்டு முடிவில் ஏற்படக்கூடிய மொத்த நிதிப் பற்றாக்குறை (–)ரூ.680.82 கோடியாக இருக்கும்.

39. வருவாய்ப் பற்றாக்குறையின் அளவு கவலையளிப்பதாகவுள்ளது. நிதிப் பற்றாக்குறை அளவைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்து வர, முந்தைய நான்கு ஆண்டுகளில் பின்பற்றப்பட்டு வந்துள்ள செலவுக் கொள்கைகள் தொடர்ந்து முனைப்பாகப் பின்பற்றப்படவேண்டும்.

40. இஃது ஓர் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடாகவிருப்பதால், நிதிப் பற்றாக்குறையைச் சரிக்கட்டுவதற்கெனப் புதிய வரி விதிப்பு நடவடிக்கைகள் எவற்றையும் மேற்கொள்ளக் கருதவில்லை. பொருத்தமான காலத்தில் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கருதலாம்.

41. அதிகரித்துவரும் வருவாய் நிதி ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் தொகையில் ஒரு பங்கை மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்க வேண்டும் என்று நான் இத்தருணத்தில் மீண்டும் வலியுறுத்த விழைகிறேன். மத்திய அரசு வரி வருவாய்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பது குறித்த மாற்றுத் திட்டம் தொடர்பாக, அதன் முடிவை விரைவில் அறிவிக்க வேண்டும். மேலும், மத்திய அரசின் பல்வேறு திட்டங்களுக்கு விருப்பத்தின்பேரில் நிதி வழங்குதல் குறைக்கப்பட வேண்டும் என்றும், இதற்குப் பதிலாக, மாநிலங்கள் தங்களுடைய நிதி நிலைமைகளையும், வளர்ச்சித் திட்டப் பணிகளையும் திட்டமிடும் வகையில், மத்திய அரசு தன்னுடைய நிதி ஆதாரங்களிலிருந்து திட்ட வட்டமான பங்கினை மாநிலங்களுக்கு வழங்க வேண்டும் என்றும் நான் வலியுறுத்த விழைகிறேன்.

42. இந்த அரசு, இதன் ஐந்தாண்டுக் கால ஆட்சியை, மிக வெற்றிகரமாக நிறைவு செய்யும் நிலையை நெருங்கி வருகிறது. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான இந்த அரசின்பால் தமிழ்நாட்டு மக்கள் வைத்திருந்த நம்பிக்கை முழுவதுமாக மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு இந்த அரசு மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுத் தந்துள்ளது. ஒவ்வொரு நிலையிலும் விரைவான வளர்ச்சி உருவாக்கப்பட்டுள்ளது. கடும் போட்டி நிலவுகின்ற சூழ்நிலையிலும், தமிழ்நாடு, நாட்டில் ஒரு

தொழில் மாநிலமாகத் திகழும் நிலையைத் தொடர்ந்து நிலை நிறுத்தி வருகிறது. வேளாண்மை உற்பத்தியும், உற்பத்தித் திறனும் மிகச் சீரான வளர்ச்சியைக் காட்டுகின்றன. இம்மாநிலத்தின் வறுமை நிலையும் கணிசமாகக் குறைந்துள்ளது. பிறப்பு–இறப்பு குறித்த புள்ளி விவரங்களின் வாயிலாக, இத்துறையில் நாம் அடைந்துள்ளதாகத் தெரியவரும் சாதனையும் ஊக்கம் அளிக்கும் வகையில் உள்ளது. அனைத்திற்கும் மேலாக, தமிழ்நாடு, அமைதியைப் பேணிக்காப்பதன் மூலம் இந்நாட்டில் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. தமிழ்நாடு மாநிலம் இன ஒற்றுமையைக் கட்டிக்காப்பதில் எடுத்துக்காட்டாக, இன ஒற்றுமையின் சின்னமாக விளங்கி வருகிறது. இவ்வகையில் இன்று நாம், நமது நாட்டில் அனைவரும் பின்பற்றுகின்ற சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறோம்.

43. இடைக்கால வரவு–செலவுத் திட்டமதிப்பீடுகளை இந்த அவையில் தாக்கல் செய்த பிறகு நடைபெறும் விவாதத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் ஆக்க பூர்வமான முறையில் தங்களுடைய உயர்ந்த கருத்துக்களைத் தெரிவிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

44. இந்த இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளை உருவாக்கும் பணியில் பேருதவியாக இருந்த நிதித்துறைச் செயலாளர் திரு பி.வி.ராஜாராமன், அவர்களுக்கும் மற்ற அரசு அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

45. இத்துடன், இந்த 1996–97 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று, இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

**வணக்கம்**

**இரா. நெடுஞ்செழியன்,**
**நிதி அமைச்சர்.**

சென்னை,
1996 ஆம் ஆண்டு
பிப்ரவரித் திங்கள் 20 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2027,
மாசித் திங்கள் 8 ஆம் நாள்.